உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

திருவல்லிக்கேணி

அரசடிக் கற்பகவிநாயகர் பதிகம்.

சிங்காரவேலர் பஞ்சரத்தினம்.

இவை
திருவல்லிக்கேணி
இந்து வாலிப பக்தசன சபையார்
விருப்பத்தின்படி
கோயமுத்தூர் தமிழ்ப்பண்டிதர் ம-௱-௱-ஸ்ரீ
ச - திருச்சிற்றம்பலம்பிள்ளையவர்கள் மாணாக்கர்
க - சுப்பிரமணியமுதலியாரவர்களால்
இயற்றப்பட்டு

திருவளவாயல்
துரைசாமிமுதலியார் அவர்கள்
முயற்சியால்

சென்னை:
ஸ்ரீ ஹரி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1899.

சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியர் உடன்கற்றவராகிய ம-௱-௱-ஸ்ரீ
M. V. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பூத்த கற்பகவி நாயகர்தம் பெருமையையும் சிறப்பின்மிக்குப்,பார்பூத்த சிங்கார வேலவர்தம் பெருமையையும் பாவாற் பாடக், கார்பூத்த திருவல்லிக் கேணிக்கோர் கண்ணெனவே கருது கின்ற, ஏர்பூத்த இந்துவா லிபபக்த ஜனசபையார் இனிது வேண்ட.

சந்ததமுஞ் சிவபெருமான் றிருவடியே புகழ்கந்தசாமி தன்பால், வந்துதித்துத் திருச்சிற்றம் பலவனெனும் நாவலன்பான் மகிழ்ந்து கற்றுச், சுந்தரஞ்சேர் கோவைநகர்க் கணியாகி விளங்குகின்ற சுப்ரமண்யன, இந்திராதி தேவருமே வியக்குமா றிவையினிதா யியற்றினனே.

உ

சிவமயம்.

திருவல்லிக்கேணி

அரசடிக் கற்பகவிநாயகர்பதிகம்.

காப்பு-வெண்பா.

விரைசெறியுஞ் சோலை விளங்கல்லிக் கேணி
யரசிடியிற் கற்பகவைங் கரனைப்—பரசிடுநற்
செந்தமிழின் மாலைதனைச் செப்புதற்கவ் யானைமுகன்
கந்தமிகு செஞ்சரணே காப்பு.

நூல்.—அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஒன்றிய கேள்வி மேலோ ருணர்விலும் உறுதி யாவும்
துன்றிய வேதத் துள்ளும் துவக்கிலா நினது பாதம்
நன்றம ரல்லிக் கேணி நல்கற் பகமே என்னே!
கன்றுசிற்றறிவேய்சின்னாட்காலத்தேமுணருமாறே.()

இரும்பினுங்கடியநெஞ்சோம்இவ்வுலகத்தின்வாழ்
க்கை, விரும்பியேதிரிவோம்நின்னையொருகணம்விழை
தவில்லோம், அரும்புகள்மதிநேர் அல்லிக்கேணியைக்
கரனே!நின்றன்,கரும்பினுமினியபாதங்காட்டிடினுய்ந்
தோமன்றே. (2)

முன்னுவார்கருமமுற்றி;மொழிகிலார்செயல்தவிர்த்
தி; என்னமுக்கண்ணன் முன்னுள் இயம்புதல்பெற்றமூ
ர்த்தி! மன்னுசிரல்லிக்கேணிவளராசடியிற்றுரு, வெ
ன்னமுன்னருளும்விக்கினேச்சுரவெமைக்காப்பா[illegible]

நாலுகையுடையவள்ளால்!நன்றமரல்லிக்கேணி,யே
லுகற்பகமாம்பிள்ளையாரெனும் எழிற்பேர்கொண்டோ
ய், நாலுமாமுகனேக்குட்டும்நாதற்குமூத்தோய்! எம்
மைச், சாலவாழ்வளித்துக்காத்துச்சரணளித்தருள்செ
ய்வாயே. (4)

அஞ்சியேயமரரோடவாரிடர்விளைத்தவேழ, வெஞ்
சினமுகத்தோன்றன்னைவீழ்த்தியவிக்னமூர்த்தி, மஞ்சி
வரல்லிக்கேணியரசின்கற்பகமே!மன்னும், செஞ்சரண்
வழங்கியெங்கள்சிறுமைகள்போக்குவாயே. (5)

ஆறமர்சடையெம்மண்ணல் அளித்தவைங்கரனேய
ல்லிப், பேறமர்கேணிவாழும்பெரியகற்பகயேமெய்க்கை,

ச றவன்முதலாய்விண்ணோர்க்கும்பயன் கொடுப்பை
யானால், சீறடியேமுக்குற்றசெய்வதுமரியதாமோ. (6)

எழுபவக்கடல்வீழ்யாமுன்னின்னருட்குரியரல்லோம்
வழுவினோம் என்று நீத்தல் மரபதோ வருந்தி வாடும்
குழுவிமே லன்றோ வன்னைக் குறுபரி வாகுங் கோல
மழுகிய அல்லிக் கேணி யரசடித் தருவாம் தேவே! (7)

எட்டொணாவடிவத்தெந்தையியம்புமோரெழுத்துட்
டோன்றிக், கிட்டியவைந்துகைய! கெழுமியவல்லிக்
கேணிப், பட்டினவரசின்கீழ்க்கற்பகமெனும்விக்கினே
ச! ஓட்டியபிறவிவெம்மையோடிடவருள்செய்வாயே. ()

ஒன்பதாமெண்போலென்னாள்நானாமுறையேமேவி
, நின்பதமொருநாளேனும்உய்ந்திடவேத்தல்செய்யே
ன், என்பொருட்குலைவதானேன் இனியருட்பார்வைநல்
காய், பொன்பெருகல்லிக்கேணிப்பெருவில்கற்பகமா
மாந்தேவே! (9)

பத்தியையுடையவன்பர்பாலெமையிருத்திப்பாச, மு
த்தியையளிப்பான் இப்பான் முன்னையதொழிய மூட்
டை, மெத்தமேலாகாவண்ணம்வீடுதந்தருள்வேண்
டும், அத்தியாய்அல்லிக்கேணியரசடியமர்ந்ததேவே. ()

திருவல்லிக்கேணி

சிங்காரவேலர் பஞ்சரத்தினம்

காப்பு.

திருவல்லிக் கேணியில்வாழ் சிங்கார வேலர்
இருபதத்தை யென்னு ளிருத்தி—மருவைந்து
பொற்பகப்பா போற்றப் புகலாம் அரசடியிற்
கற்பகத்து யானை கழல்.

நூல்.—எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பூத்த திருவல்லிக் கேணி யில்வாழ்
சிங்கார வேலரெனுஞ் சிறந்த தேவின்
ஏர்பூத்த திருப்பதமாங் கரும்பைத் தேனை
யினியதொரு கற்கண்டை யெழில்கொள் பாலை
நார்பூத்த மனத்தினராய் நம்பிக் கொள்ளின்
நலமுறலிவ் வுலகதனில் வாழ்ந்து பின்னர்க்
கார்பூத்த வானகத்தே கவின்பெற றோங்கிக்
கலந்துருக னடிவீட்டின் வாழ்வா ரன்றே. (1)

திருவல்லிக் கேணியெனச் சிறந்த பேர்கொள்
திகழ்பதியிற் சிங்கார வேலர் என்றும்
மருமல்லி போலுமிரு மங்கை மார்கள்
மகிழ்ந்தணையும் மார்பினர்தீ விழியாலங்காள்

11 JAN 1920

ஒருவல்லிக் கனையழித்தார் இளஞ்சேய் பாதம்
ஒருகணமே எனினுமனம் வைத்து வாழின்
மருவல்லிக் கிவர்கணெனத் தென்பான் மன்னை
மறுக்கஞ்செய் திடுமந்த மயிலோன்றானே. (2)

கோலமுறு திருவல்லிக் கேணி யென்னும்
குலவுதிரு நகரதனில் வாழ்சிங் கார
வேலவன்முன் அயனொருநாள் அகந்தைகொள்ள
மிக்கவதை யறுத்திடுவான் வேத வாய்மைச்
சீலவெழுத் துரைகேட்டுச் சிறையி ருத்திச்
சிவபெருமாற் குபதேசஞ் செய்தான் அன்ன
பாலன்பத மெமதுமுடிக் கணியாய் நாளும்
பரிவுடனே காக்குமவை பகரின் மாதோ. (3)

விண்ணவருக் கிடர்செயலை விரும்பி வாழ்ந்த
விழற்சூரைத் தொலைத்தந்தத் தேவர் தம்மை
முன்னிருந்த குடியேற்றிச் சிறைதொலைத்த
முன்னவனே! திருவல்லிக் கேணி யாறு
சென்னியுடைச் சிங்கார வேலாய்! எம்மைச்
செம்மையிலா துடற்றிநலிந் திடர்செய் பாசம்
மண்ணுலகிற் பிறவிசெயல் மாற்றி நின்றன்
மன்னுபத மளித்தனினக் கரிதோ வன்றே. (4)

இம்மையினு மம்மையினு மின்ப மெய்தும்
இருமலரார் நோக்குமலித் துன்றன் பாதம்
மும்மைபெறு காலமுமெம் முணர்வின் மேவும்
முதல்வரமோன் றதைவிடவே றென்றும் வேண்டோம்
அம்மையென வனைத்துயிரு மளித்துக் காக்கும்
ஆறுமுக முடையவனே! யருளார் வேளே!
செம்மைபெறு திருவல்லிக் கேணி வாழுஞ்
சிங்கார வேலவனுஞ் சிறந்த தேவே. (5)

வாழி.

ஏர் மருவல் லிக்கேணிக் கற்ப கத்தின்
இணையடிகள் வாழ்கபுகழ்ச் சைவம் வாழ்க
சீர்மருவுஞ் சிங்காரர் பதங்கள் வாழ்க
திருநீறு மக்காமு மணியும் வாழ்க
பார்மருவு மிவர்பணிசெய் இந்து பால
பக்தசன சபையாரா மடியார் வாழ்க
கார்மருவு கருணையுடை யரசும் வாழ்க
கண்ணுதலா ரன்பரெலாம் வாழ்க மாதோ.

முற்றிற்று.

சிவஞானயோகிகள் சேவடிவாழ்க.

23 JUN 1914
SHIYALI.

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

நல்லைப் பதிகம்.

பதிகம். க.

திருச்சிற்றம்பலம்.

செங்கனக மேருவரைச் சிலையான் றந்த
செவ்வேளைச் சினமயிலை யூர்ந்தான் றன்னை
யங்கமலத் தயனொடுமா லமரர் வேண்ட
வயிற்படையா னசுரரிறை மார்பு கீண்டு
சிங்கமுகன் றன்னொடுதா ரகனுஞ் சாயத்
திகழ்குலிசம் வேல்விடுக்குஞ் செங்கை யானை
நங்கனக விலங்கையில்யாழ்ப் பாண மேய
நல்லூரி னுன்றெழுது நயந்த வாறே. (க)

ஓருருவே மூவிரண்டு வடிவ மாகி
யொன்பதின்மர் சத்திகளின் றனய ரானோர்
பாருருவப் பூதர்கடம் படையி னோடு
பாங்காகப் பன்னிரண்டு மொய்ம்பு கொண்டு
ஏருருவக் கொக்கதனை யிருகூ றாக்கி
யிலங்குமயில் சேவலென விசைவித் தானை
காருருவ விலங்கையில்யாழ்ப் பாண மேய
நல்லூரி னுன்றெழுது நயந்த வாறே. (உ)

பொன்னடர் பொருட்டிந்தப் புவியிற் போந்து
போர்வலிய சூரனுட லலைவாய்ப் போக்கி
யந்நாட்டி னரசுநிலை யமரர்க் கீந்தே
யடலயிரா வதமீன்ற வஞ்சொன் மின்னைத்
தென்னாட்டிற் சிறந்ததிருப் பரங்குன் றத்திற்
திருமணஞ்செய் திருவுடைய தீர்த்தன் றன்னை
நன்னடா மிலங்கையில்யாழ்ப் பாண மேய
நல்லூரி னன்றொழுது நயந்த வாறே. (௩)

சிலைவேடர் தங்குலத்துத் தோகை யான
சிறுநுதற்சுந் தரிதன்னைச் சிற்றா ரின்கட்
கலைவேடர் போற்சென்று காதல் காட்டிக்
கந்தருவத் தாற்கலந்த கந்தன் றன்னை
மலைவேடர் மகிழ்மருந்தை மாணிக் கத்தை
மன்மதன்றன் மைத்துனனை மயிலூர் வானை
நலமேவு மிலங்கையில்யாழ்ப் பாண மேய
நல்லூரி னன்றொழுது நயந்த வாறே. (௪)

பன்னிரண்டு கரமுடைய பகவன் றன்னைப்
பண்ணவர்கட் கருள்புரிந்த பண்பன் றன்னை
மின்னிரண்டு மருங்குறவே மிளிர்வான் றன்னை
மீமிசைஞா யிற்றினொளிர் மேனி யானை
யெண்ணிரண்டு கண்மணியா யெங்கு முள்ள
வெழிலாரு மேரகத்தெம் மிறைவன் றன்னை
நன்னிதிசே ரிலங்கையில்யாழ்ப் பாண மேய
நல்லூரி னன்றொழுது நயந்த வாறே. (௫)

செந்தமிழை யகத்தியற்குத் தெளிவித் தானைச்
சேந்தனைச்செங் கடம்பணியும் செவ்வே டன்னை
யந்தமிலா வடியவர்க ளயன்மா லேனோ
ரடியிணையை யருச்சிக்கு மன்பு கண்டு
சந்ததமு மின்பமரு முத்தி நல்குந்
தற்பரனைச் சதக்கிரது மருகன் றன்னை
நந்தலிலா விலங்கையில்யாழ்ப் பாண மேய
நல்லூரி னான்றெழுந்து நயந்த வாறே. (௬)

பாவாணர் தாம்போற்றும் பரங்குன் றோடு
பருப்பதங்கள் பழனிபழ முதிருஞ் சோலை
தேவாதி தேவனமர் திருச்செந் தூருந்
திருத்தில்லை திருவருணை திகழுங் காசி
பூவாரும் பொழிற்கச்சிக் குமர கோட்டம்
பொருவரிய வேரகமும் பொருந்தி னானை
காவார விலங்கையில்யாழ்ப் பாண மேய
நல்லூரி னான்றெழுந்து நயந்த வாறே. (௭)

முன்கீரன் மொழிந்தமுரு காற்றைக் கேட்டு
முரட்பூதந் தனைமுனிந்த முதல்வன் றன்னை
பின்கீரங் கடைந்தமுது புலவர்க் கீந்த
பெம்மானை யம்மானாக் கொண்டான் றன்னை
யின்கீர மாட்டுகந்த விறைவன் றன்னை
யியலிசைநா டகமாகி யிருந்த சேயை
நன்கியு மிலங்கையில்யாழ்ப் பாண மேய
நல்லூரி னான்றெழுந்து நயந்த வாறே. (௮)

பராசரன்றன் சிறுராறுவர் பணிந்து போற்றப்
பரங்குன்றிற் பணித்தருளும் பண்பன் றன்னைச்
சராசரங்க ளனைத்தினுக்குந் தாயா னானைச்
சண்முகனைச் சங்கரன்றன் மதலை தன்னைச்
சுராசுரர்க டொழுதேத்துஞ் சுவாமி தன்னைச்
சுகுணபரி பூரணனைச் சுகிர்தன் றன்னை
நராசுரர்வா ழிலங்கையில்யாழ்ப் பாண மேய
நல்லூரி னன்றெழுது நயந்த வாறே. (கூ)

வானாகி வளியாகி வன்னி யாகி
வருபுனலாய் வன்னிலமாய் வாய்ந்த வண்டக்
கானாகிக் கதிரவனாய் மதியு மாகிக்
காதலித்தங் கடியவர்கள் கருத நின்ற
வூனாகி யுயிராகி யுணர்வு மாகி
யுள்ளத்துக் கப்பாலா யோங்கி னானை
நானாநல் வளஞ்செறியாழ்ப் பாண மேய
நல்லூரி னன்றெழுது நயந்த வாறே. (கo)

காசியில்வா ழந்தணனுங் கலைவ லோன்றன்
கதிர்காமங் காதலித்த கருத்த னாகித்
தேசிகனாஞ் சுவாமியையித் தென்னாட் டிற்குத்
திருந்தியசத் திகளோடுஞ் சேர்த்தா னென்று
பேசிவரும் பெருவார்த்தை கேட்ட மேலோர்
பேரன்பி னுடனிறைஞ்சும் பெம்மான் றன்னை
நாசியெனு மிலங்கையில்யாழ்ப் பாண மேய
நல்லூரி னன்றெழுது நயந்த வாறே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பதிகம். உ.

திருச்சிற்றம்பலம்.

ஆறுமா முகமுடைய வத்தா போற்றி
யருள்விழிகள் பன்னிரண்டு முடையாய் போற்றி
தேறுமுக மின்றியே திரிந்த தேவர்
தெளிந்திடுமா றருள்புரிந்த செல்வா போற்றி
பாறுவீழ் செருக்களத்திற் சூர பன்மன்
பதைத்திடவே வேல்விடுத்த பண்பா போற்றி
நாறுபூஞ் சோலைசூழ் நகரே யான
நல்லையமர் காங்கேய போற்றி போற்றி. (௧)

அஞ்செழுத்து மாறெழுத்து மானாய் போற்றி
யமரர்குழாந் தொழுதேத்து மண்ணா போற்றி
செஞ்சுடர்வை வேலுடைய செம்மல் போற்றி
சேவலுடன் மயில்போற்ற வருவாய் போற்றி
யஞ்சேலென் றடியார்கட் கருள்வாய் போற்றி
யாரன் மாரறுவர்முலை யுண்டாய் போற்றி
நஞ்சேறு கண்டனமர் நகரென் றேத்தும்
நல்லையமர் காங்கேய போற்றி போற்றி. (உ)

ஆணாகிப் பெண்ணாகி யருள்வாய் போற்றி
யலியெனவு மமர்கின்ற வரசே போற்றி
சேணாடர் கோன்மகளாந் தெய்வ யானை
திருமுலைசேர் புயமுடைய செல்வா போற்றி
வேணாடர் வேந்தாகி நின்றாய் போற்றி
வேடர்தந் திருமகளை வேட்டாய் போற்றி
நாணாத மலையெடுத்த நம்பன் மேய
நல்லையமர் காங்கேய போற்றி போற்றி. (ங)

பொன்னுடனே மெய்ப்பொருளுந் தருவாய் போற்றி
போகமுடன் வீடருளும் புனிதா போற்றி
யென்னுடைய துயரெவையுங் களைவாய் போற்றி
யெழுபிறப்பு மெனையாளு மெந்தாய் போற்றி
மின்னுடைய வேல்வீசும் விகிர்தா போற்றி
மீளாமே யடியென்மேல் வைப்பாய் போற்றி
நன்னுதலார் நடம்பயிலு நத்த மான
நல்லையமர் காங்கேய போற்றி போற்றி. (௪)

பாலினுறு சுவையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பவமறுக்கும் பரனே போற்றி
காலினுறு முறையேபோய் மதியைத் தேக்கிக்
கருதரிய வொளிகாட்டுங் கடவுள் போற்றி
சேலினுறு கண்ணார் பின்னே செல்லுஞ்
சிந்தையினைத் தடுத்தருளுந் தீரா போற்றி
நாலினுறு தோற்றத்தை நண்ணார் வாழு
நல்லையமர் காங்கேய போற்றி போற்றி. (௫)

ஆணவத்தி னுடன்கன்ம மறுப்பாய் போற்றி
யகன்மாயை யழித்தருளு மன்பா போற்றி
மாணுறுமம் மாயேயம் மாற்றிப் பின்னர்
மருவுதிரோ தாயியுமே மாய்ப்பாய் போற்றி
காணுறுமூ விருமுகமும் காட்டியே தான்
கழலிணைகள் கருதுவார்க் களிப்பாய் போற்றி
நாணுறுமிந் திரியமுடை நல்லோர் போற்றும்
நல்லையமர் காங்கேய போற்றி போற்றி. (௬)

MUDALIAR,
JUN 1914

சரியையினை யருள்செய்யுஞ் சாமி போற்றி
சரவணத்தி லெழுந்தருள்சண் முகனே போற்றி
கிரியையினை யருள்செய்யுங் கீதா போற்றி
கிரிகளின்மே னடனஞ்செய் கிரீச போற்றி
யரியதுவாம் யோகினையு மளிப்பாய் போற்றி
யந்தமிலா ஞானமரு ளமலா போற்றி
நரிபரியாய் வருவிக்கும் நம்பன் மேய
நல்லையமர் காங்கேய போற்றி போற்றி. (எ)

ஆளான வடியவரை யாண்டாய் போற்றி
யருணகிரிக் கருள்புரிந்த வத்தா போற்றி
மீளாத கதியருளும் மேலோய் போற்றி
மீனவனுய் மதுரையில்வீற் றிருந்தாய் போற்றி
கேளாகித் தமிழினையுங் கிளந்தாய் போற்றி
கீரன்றன் மொழிதனையுங் கேட்டாய் போற்றி
நாளான போகாமே நல்லோர் போற்றுந்
நல்லையமர் காங்கேய போற்றி போற்றி. (அ)

தீவினையைத் தீர்த்தருளுந் தீர்த்தா போற்றி
திருவடியை யென்றலைமேல் வைப்பாய் போற்றி
பாவனைசேர் பழவடியார்க் கருள்வாய் போற்றி
பரவுவார் பிணிதீர்க்கும் பரனே போற்றி
தேவர்கள்சே னாபதியாந் தேவே போற்றி
தேவகிரி தனிலமர்ந்த தேனே போற்றி
நாவினைசேர் நாவலர்க ணயந்து போற்றுந்
நல்லையமர் காங்கேய போற்றி போற்றி. (கூ)

சந்தனமார் பொதியமுனிக் கருள்வாய் போற்றி
சாந்தவர்கட் கருள்செய்யுஞ் சாமி போற்றி
பந்தனஞ்சேர் சேதுவினிற் பரனைப் போற்றும்
பார்த்திபனு மிராமனையும் பணித்தாய் போற்றி
கந்தருவத் தவர்கீதங் கேட்பாய் போற்றி
களவுநூற் பொருள்கேட்டுக் களித்தாய் போற்றி
நந்திதனக் கருள்புரியுங் நாதா போற்றி
நல்லையமர் காங்கேய போற்றி போற்றி. (க0)

கச்சியப்ப ரிருவர்தமிழ் கொண்டாய் போற்றி
காதல்புரி வோர்தமிழுங் கொள்வாய் போற்றி
செச்சைமலர் புனைந்தருளுஞ் செவ்வேள் போற்றி
சேவலமர் கொடியுடைய சேந்தா போற்றி
பச்சைமயி லூர்ந்தருளும் பாலா போற்றி
பண்ணவரைச் சிறைமீட்ட பண்பா போற்றி
நச்சிநமன் றமர்வரினும் நலிப்பாய் போற்றி
நல்லையமர் காங்கேய போற்றி போற்றி. (கக)

திருச்சிற்றம்பலம்.

பதிகம். ௩.

திருச்சிற்றம்பலம்.

சந்திரசே கரன்மருவுந் தானந்தோறுஞ்
சார்ந்திருந்து சார்ங்கமருள் தைய லோடு
மிந்திரன்றன் மகள்தெய்வ யானை யோடு
மிந்நாட்டிற் புவனேக வாகு கண்ட
மந்திரத்துட் புகுந்தருளும் மைந்தன் றன்னை
மயிலேறும் பெருமானை மாசி லானை
நந்தரத்தார் நயந்திறைஞ்சுந் நாவ லோனை
நல்லூரிற் கண்டடியார் நயந்த வாறே. (க)

பங்கயற்குப் பிரணவத்தைப் பகர்ந்தான் றன்னைப்
பகர்வரிய வப்பொருளைப் பரிந்து கேட்ட
சங்கரற்குத் தெரித்தருளுஞ் சதுரன் றன்னைச்
சாலோக முதற்பதங்கள் சார்விப் பானைச்
சிங்கயா ரியக்குரிசில் செங்கோ லோச்சச்
சிறந்திடுமந் திரியாராய்த் திகழ்ந்த மேன்மை
நங்கள்குலப் புவனேக வாகு போற்றுந்
நல்லூரிற் கண்டடியார் நயந்த வாறே. (௨)

சிந்துவின்கண் மகேந்திரத்திற் சூர பன்மன்
சிறைப்படுத்துந் தேவர்துயர் தீர்ப்பான் முன்னி
யிந்திரைகேள் வன்முதலோ ரிரந்து வேண்ட
விமயமயி றனைவேட்ட விறைவன் கொண்ட
முந்துதிரு முகங்களவை யாறி னின்றும்
முழுங்கழலாய் நுதல்விழிக்கட் டோன்றி ஞானை
நந்துசெறி வயல்புடைசூழ் நகர மாகுந்
நல்லூரிற் கண்டடியார் நயந்த வாறே. (௩)

செம்மணியைத் தெள்ளமிர்தைத் தேனைப் பாலைச்
செழுங்கரும்பி னின்சுவையைச் செந்தில் வாழு
மம்மணியை யரும்பொன்னை யழகார் முத்தை
யானந்த வீடருளு மம்மான் றன்னை
மும்மணியை முதற்சிந்தா மணி யொப்பானை
மூவுலகுந் தொழுதேத்து முதல்வன் றன்னை
நம்மணியை நாகரது மணியா னானை
நல்லூரிற் கண்டடியார் நயந்த வாறே. (௪)

பண்ணாகிப் பண்ணினுறு மிசையு மாகிப்
பாவாகிப் பாவினுறு பொருளு மாகி
யெண்ணாகி யெழுத்தாகி யியல்பு மாகி
யேழிசையா யெழுநரம்பி னோசை யாகிக்
கண்ணாகிக் கண்ணினுறு மணியு மாகிக்
காண்பானைக் காட்டுபவன் முதலா னானை
நண்ணாருந் நணியிறைஞ்சு நம்பன் மேய
நல்லூரிற் கண்டடியார் நயந்த வாறே. (௫)

வடவரையின் கொடுமுடிகண் மூன்றி லொன்றுப்
வாயுபறித் தெறிந்திடலும் வந்து வீழ்ந்த
திடமுடைய முக்கோணக் குன்று தானுந்
திருந்தியகே தீச்சரமுந் திகழு மீழக்
கடல்புடைசூ ழிலங்கையெனுங் கனக நாட்டிற்
கதிர்காம மேவியமர் கந்தன் றன்னை
நடமுடைய பத்தாநா ணல்லோர் போற்றுந்
நல்லூரிற் கண்டடியார் நயந்த வாறே. (௬)

தத்துவங்க ளாறாறு மாயி னானைத்
தாண்டவத்தைத் துரியத்தின் றலைசெய் வானை
நித்தமுட னநித்தமுறு நீர்மை காட்டி
நிட்ன டநிலை யருள்புரியு நிமலன் றன்னைப்
பத்துறழு நூறுடனே யெட்டின் காறும்
பகழிபல பரப்பியமர் கருதி னானை
நத்துதிரை யெறிகடல்சூழ் ஞாலந் தன்னி
னல்லூரிற் கண்டடியார் நயந்த வாறே. (எ)

பேசரிய சிவஞ்சத்தி நாதம் விந்தாய்ப்
பெருகிவருஞ் சதாசிவனாய் மகேச னாகி
யாசரிய வரனரியா யயனு மாகி
யன்புடைய விஞ்ஞான கலர்க ளாகிக்
காசரிய பிரளயா கலரு மாகிக்
காண்டகைய சகலருமாய்க் கவினு வானை
நாசமிலா நற்றவர்கள் நண்ணிப் போற்றுந்
நல்லூரிற் கண்டடியார் நயந்த வாறே. (அ)

சுத்ததத் துவமுமாகித் தொகுவாக் காகிச்
சூழ்பஞ்ச கலையாகிச் சுருதி யோதச்
சத்திதரு மக்கரங்க ளைம்பத் தொன்றாய்ச்
சார்பதங்க ளெண்பதனோ டொன்று மாகி
வைத்ததொரு மனுக்களெழு கோடி யாகி
வானவனா கமங்களெழு நான்கு மாகி
நத்தமுறு முபாகமமு மாயி னானை
நல்லூரிற் கண்டடியார் நயந்த வாறே. (௯)